
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞானகுரு
சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் அருளியது

# வளரும் புரட்சி வரலாறு

ஓம் குருவே போற்றி! ஓம் குரு வாழ்க! ஓம் குருவே எல்லாம்!



**இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,**
**ஞானகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**
(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் சமாது கொண்டருளுபவர்)

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,119 **வைகாசி** மாதம்.

## இந்து இலக்கியக் கழகம்

காணிக்கை: ரூ 10/-

# உள்ளுறை

1. **"வளரும் புரட்சி வரலாறு பற்றிய ஒரு கருத்தோட்டம்" -** 1981இல் குருதேவர் ஆணைப்படி தலைமைப்பீடத்திலிருந்து எழுதப்பட்ட கட்டுரை அஞ்சலின் நகல்.
2. **"அருட்பணி செயல் விளக்க அருளுரை அஞ்சல்" -** 1982இல் குருதேவர் அருளிய குருபாரம்பரிய வாசகங்களைக் கொண்ட கட்டுரை அஞ்சலின் நகல்.
3. **"தாந்தரீகப் பூசை விளக்க மடல்" -** 1983இல் எழுதி வழங்கப்பட்ட கட்டுரையின் நகல்.
4. **"குருநிலைச் செயல் விளக்கக் குருவாக்கியம்" -** 1985இல் எழுதி வழங்கப்பட்ட கட்டுரையின் நகல்.
5. **"யாகப் பெருவிழா" -** வைகாசித் திங்கள் முழுநிலவு நாளில் நிகழும் பால்குட விழாவில் வழங்கப்படும் அருள் முழக்கங்களின் நகல்.
6. **"குருவாசகங்கள்" -** குருதேவர் அறிக்கையில் வெளியாகிய குருவாசகங்களின் நகல்.

---

'இறை வழிபாட்டில் உயிர்ப்பலி இன்றியமையாததே.'

'புலால் உண்ணுதவன் பிறவித் துன்பத்தை வெல்ல முடியாது.'

'புலால் உணவு மரக்கறியுணவு என்று வேறுபடுத்தி உணர்பவன் பக்குவப் படாதவனே.'

'மானுடனின் மதவெறியும், சாதிவெறியும், மொழிவெறியும், இனவெறியும், ... இறை வழிபாட்டில் இடம்பெறக் கூடாதவையே.'

**குருதேவர் அவர்களின் அஞ்சல் திரட்டிலிருந்து எடுக்கப் பட்ட சில வரிகள்.**

ஓம்

# வளரும் புரட்சி வரலாறு பற்றிய ஒரு கருத்தோட்டம்

*அருளுரை வழங்கியவர்*: **ஞாலகுரு குருமகா சன்னிதானம், சித்தர் கருவூரர்.**

அனுப்புநர்:-

அருள்மிகு சோழப்பெருமண்டல அருளாட்சி திருவோலக்க நாயகம்,
ஆத்தாள் முப்புரம் கொண்டருளு தேவி ஆதிபராசத்தி ஆதினம்,
பதினெண்சித்தர் குருவழி வாரிசு கொண்டருளு குரிசில்,
சித்தரடியார் சோ. இரவீந்திரன்.

பெறுநர்:-

அருள்மிகு மடப்புரம் காளியம்மன் சன்னிதானம்,
ஆலவாய் அங்கயற்கண்ணி ஆதினம்,
அழகர் கோயில் முருகன் அமளிகை,
சித்தரடியான் கு. இராசா,
S/O குருசாமி நாயுடு,
12, மோதிலால் 3வது தெரு, மதுரை-10; PIN: 625010.

1) தாத்தாக்கள் ஆத்தாக்கள் அருளால் தங்களுக்கும் தங்கள் குடும்பத்தார்க்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் எல்லா நலன்களும் வெற்றிகளும் உண்டாகட்டும்.

2) 23.10.81இல் உங்களோடு சேர்த்து மொத்தம் பதின்மூன்று சித்தரடியான்களுக்கு அருள் பட்டங்கள் வழங்கப் பட்டிருக்கின்றன. அந்தத் தாக்கீது அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம் நெ.சேவுகன் அவர்களிடம் கொடுத்து அனுப்பப் பட்டுள்ளது. எனவே, தாயுமானவர்

சன்னிதானம், நீங்களும் மற்ற நண்பர்களும் விரைவில் நேரில் சென்று அருள் பட்டங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். அதன்பிறகு அவரே நேரில் மதுரைக்கு வந்து ஒவ்வொரு அடியான் வீட்டிலும் பூசை செய்து பட்டம் கட்டி விடுவார். இது பற்றி உடனே தாயுமானவர் சன்னிதானத்தைச் சந்தித்து கலந்து பேசி முடிவெடுங்கள். முடிந்தால் ஏதேனும் ஓர் கோயிலில் அல்லது பொது இடத்தில் அல்லது யாராவது ஒருவர் வீட்டில் திருமண நிகழ்ச்சி போல் மாவிலை, தோரணங்கள் கட்டி இசைத் தட்டு அல்லது டேப் ரிகார்டர் அல்லது மேளக்காரர்களின் கச்சேரி வைத்து இசை பரப்பி யாகம் வளர்த்து நமது வீரமாகாளி சன்னிதானத்தை உங்களுக்கெல்லாம் ஒரே இடத்தில் அருள் பட்டங்கள் வழங்கச் சொல்லுங்கள். அனைவரிடமும் பணம் வசூல் செய்து ஒற்றுமையுடன் கூடி இந்த விழாவை வெற்றிகரமாக நடத்துங்கள். இந்த விழாவின் வெற்றி நமது குருதேவர் பங்கேற்கப் போகும் நிகழ்ச்சிகளுக்கும், மாநாட்டிற்கும் முன்மாதிரியாக அல்லது வெள்ளோட்டமாக இருக்கட்டும்.

3) நம் குருதேவர் அல்லது வெளியூரில் உள்ள அடியான்கள் யாருக்கு அஞ்சல் எழுதினாலும் அதனை எல்லோரும் படித்து மகிழ வேண்டும். உடனுக்குடன் நகல் எடுத்து சென்னை, திருச்சி, திருவையாறு, காரியேந்தல்பட்டி முதலிய இடங்களுக்கு அனுப்ப வேண்டும். அங்கு நம்மவர்களில் பெரும்பாலானவர்களுக்கு ஓய்வு இல்லாததாலும், நகலெடுக்கின்ற அளவுக்கு கையெழுத்து நன்றாக இல்லாததாலும்; நகல் எடுப்பதற்கு யாராவது ஒருவரை அனைவருக்கும் பொதுவாகச் சம்பளம் கொடுத்தாவது ஏற்பாடு செய்யுங்கள். விரைவில் நமக்கு வசதி வந்ததும் ஒரு ரோனியோ மெசின் அல்லது டைப்ரைட்டர் விலைக்கு வாங்கி குருதேவரே எல்லோருக்கும் நகல்கள் எடுத்து அனுப்பி விடுவார். கவலை வேண்டாம்.

4) நமது இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கொள்கைப்படி தொழிற்சாலைகள், வணிகம், விவசாயம், போக்குவரத்து முதலிய பெரும்பாலான அலுவல்கள் அனைத்தும் தொழிலாளர்களின் கூட்டுக் கழகங்களால் (Board, Committee, Union)தான் நடத்தப் படும். அது கூட்டுறவு முறையில் இயங்கும். இலஞ்ச ஊழல்களுக்கு இடமின்றி நிறைவேற வேண்டுமானால் தன்னலமற்ற, தியாக உணர்வு நிறைந்த, அஞ்சா நெஞ்சம் கொண்ட, வீரம் மிகுந்த, கொள்கைப் பற்றும் குறிக்கோள் உறுதியும் உடைய சில ஆயிரம் சித்தரடியான்களும், சித்தரடியாள்களும், சித்தரடியார்களும் நாம் அரசியலில் நேரடியாக ஈடுபடுவதற்கு முன்பே தயாரிக்கப் பட்டுவிடல் வேண்டும். ஏனென்றால் அரசியல் வாழ்வில் ஆட்டு மந்தை போல் மக்கள் கூட்டம் எந்த நொடியிலும் நம்மோடு சேர்ந்து விடும். அதனால், ஆட்சியைப் பிடித்தாலும் ஏற்கனவே உள்ள ஊழல் பேர்வழிகள், தன்னல வெறியர்கள், சமுதாய விரோதிகள், பழமை வாதிகள், கோழைகள், அடிமைப்புத்தி படைத்தவர்கள், எதிர்ப் புரட்சி வாதிகள்..... நம்முடைய புதுமைத் திட்டங்களையும், புரட்சி நோக்கங்களையும், சமத்துவ சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டாட்சிக் கொள்கையையும் சிறுகச் சிறுகச் சிதைத்து, நலிவடைய வைத்துச் செயலற்றுப் போகச் செய்து, முடிவில் புதைகுழிக்கு அனுப்பிக் கல்லறையும் கட்டி விடுவார்கள்.

எனவே, இன்றைக்கு நாட்டிலுள்ள கல்வித் துறையினரையும், கலைத் துறையினரையும், அதிகாரிகளையும், அலுவலகப் பாட்டாளிகளையும் உடனடியாக நம்முடைய அடியான்களின் நேரடிக் கண்காணிப்பு வழிநடத்துதலுக்கு உள்ளாக்கினால்தான்; அறிவுத் துறையினரால் உடலுழைப்புப் பாட்டாளி வர்க்கம் பிரித்தாளப் படுவதும், சுரண்டப் படுவதும், ஏமாற்றப் படுவதும் நிறுத்தப்பட முடியும். இதற்கு அதிகம் கல்வியறிவு இல்லாத விவசாயிகள், கூலிகள், குட்டி வணிகர்கள், அலுவலகக் கடைநிலை ஊழியர்கள், ஆலைத்

தொழிலாளர்கள், அன்றுடக் கூலிகளாய் வாழும் பாமரப் பாட்டாளிகள் முதலியவர்கள் கடவுள் அருளால், இந்துமதத் தத்துவத்தால், சித்தர் நெறியால் சித்தர் நெறிச் செல்வர்களாய் .... குமரி முதல் இமயம் வரை ஒன்று திரட்டப் பட்டாக வேண்டும். ஏனெனில் நமது கொள்கைகளும், குறிக்கோளும் இந்துமதம் பிறந்து வளர்ந்து வாழ்ந்து வரும் இந்தியத் துணைக் கண்ட மக்கள் அனைவர்க்கும் நலமளிக்க வேண்டும், வளமளிக்க வேண்டும், வாழ்வளிக்க வேண்டும்.

5) நண்ப! ஆரியர்கள் கி.மு.2000இல் இந்தியாவுக்குள் நுழைந்து ஓராயிரமாண்டுகள் ஆகியும் கூட இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் தமிழ் மொழிதான் ஆட்சி செய்து கொண்டிருந்தது. அந்தத் தமிழ் மொழியோடு பல்லாயிரமாண்டுகளுக்கு முன் தமிழில் இருந்து பிறந்து வளர்ந்து தனித் தன்மை பெற்றுவிட்ட சில உலக மொழிகள் மீண்டும் வந்து கலப்பு செய்தன. அதனுல்தான், இந்தியா முழுதும் பல புதிய கூட்டு மொழிகள் பிறந்தன. அவற்றினடிப்படையில் பல மொழி வழி இனங்கள் (different races formed on linguistical basis) தோன்றின. இப்படித்தான் இந்தியாவின் பூர்வீகக் குடிகளான தமிழர்கள் பல மொழிகளைப் பேசும் பல இனத்தவர்களாகக் காலப் போக்கில் பிரிந்தார்கள். எனவே, இந்தியாவில் உள்ள எல்லா மொழிகளும் தமிழ் மொழியின் குழந்தைகளே என்பதையும், இந்தியாவில் உள்ள எல்லா இனத்தவர்களும் தமிழர்களே என்பதையும் மிகத் தெளிவாகப் புரிந்து கொண்டே நமது குருதேவர் இந்தியாவில் உள்ள மக்கள் அனைவரும் ஒரு தாய் மக்களே என்ற கருத்தை விளக்கும் வண்ணம் நமது இந்து மறுமலர்ச்சி இயக்கத்தை இந்திய மக்கள் அனைவர்க்கும் உரியதாக வளர்த்து வருகிறுர்.

அதாவது, காலப்போக்கில் தமிழர்கள் பல மொழிகளுக்குரியவர்களாகிப் பல இனத்தவர்களாகப் பிரிந்திட்ட போதிலும்; அவர்கள் தங்களுடைய முன்னேர்கள் கடைப்பிடித்த **சித்தர் நெறி எனும் இந்து மதத்தையே**

அகப் பண்பாடாகவும் (culture), புற நாகரீகமாகவும் (Style, Fashion, Civilization) இன்று வரை கையாண்டு வருகிறுர்கள். எனவேதான் மீண்டும் இந்தியாவிலுள்ள அனைவரையும் ஒரே குடும்பமாக ஒன்று திரட்டி, ஒற்றுமைப்படுத்தி சமுதாய விழிச்சியும், அரசியல் செழுச்சியும் பெற்றிடுமாறு செய்வதற்கு இந்து மதத்தையே சாதனமாக அல்லது கருவியாக கையாளப் புறப்பட்டிருக்கிறுர் நமது குருதேவர். இதைத்தான் *மதத்தில் புரட்சியல்ல* நடக்கப் போவது; "மதவழிப் புரட்சியே" (In India Revolution in Religion is not necessary; only revolution through religion is necessary). இதனை முதலில் நம்மவர்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் இந்தியா முழுவதையும் இப் பேருண்மையினைப் புரியும்படிச் செய்ய முடியும்.

6) நண்ப! நமது குருதேவர் தனது அநுபவங்களை ஒன்று திரட்டி இன்றைய மக்களின் எல்லா நிலைகளையும் உணர்ந்து அதற்கேற்பவே தமது செயல் திட்டங்களை வகுத்துள்ளார். நாம் யாவரும் போராட்டமோ, பெரிய பெரிய ஊர்வலங்களோ செய்யத் தேவையில்லை. நம்மில் யாரும் சிறைக்குக் கூடச் செல்லத் தேவையில்லை. எக்காரணத்தை முன்னிட்டும் நம்மில் யாரும் வன்முறைச் செயலில் ஈடுபடப் போவதில்லை. பெருவீரமோ, தியாகமோ நமது மறுமலர்ச்சி இயக்கத்துக்குத் தேவையில்லை. நாம் செய்ய வேண்டியதெல்லாம் துணிவும், பணிவும், பொதுநல நாட்டமும், கட்டுப்பாட்டுடன் பிறரோடு ஒருங்கிணைந்து ஒற்றுமையாகச் செயல்படும் பண்பாடுமுடைய சித்தரடியான்களையே பட்டி தொட்டிகளிலும், கிராமங்களிலும், பெருநகரங்களில் தெருக்கள் அல்லது வட்டாரங்கள் தோறும் உருவாக்க வேண்டுமென்பதுதான்.

இதனை விரைந்து செயல்படுத்துவதற்காக தனிமனிதர்கள் இல்லங்கள் தோறும் வாசலில் ஞானக் கொடிகள் ஏற்ற வேண்டும். முடிந்தால்

கோயில்களிலும், பொதுவிடங்களிலும் ஞானக் கொடிகளை ஏற்ற வேண்டும். இதற்கு மேல் ஆங்காங்கே அருளாளர்கள், நாயன்மார்கள், அடியார்கள், ஆழ்வார்கள், புகழ்பெற்ற தமிழிலக்கியங்கள், சிறந்த தமிழ்ப் புலவர்கள், சமய சமுதாய அரசியல் பெரியவர்கள் முதலியவர்களின் பெயரால் சங்கம், மன்றம், கழகம், திருக்கூட்டம், வழிபாட்டுக் கூட்டம், பொதுப்பணி மன்றம்.... என்ற பெயர்களில் பல அமைப்புக்களை ஏற்படுத்த வேண்டும். இவையே இன்றைக்கு உடனடியாகத் தேவைப் படுகின்ற நமது குருதேவரின் செயல்திட்டம்.

இதனைத் தலைவர், செயலர், பொருளாளர் என்ற மூவரை ஒவ்வொர் அமைப்பிலும் உண்டாக்கிக் கட்டுப்பாடும், நிறுவன நிர்வாக ஒழுங்கமைப்பும் உடைய ஒரு வலுவான சிறு கூட்டத்தை உருவாக்கி விட்டால் போதும். அதாவது நமது இயக்கச் செயல்வீரர்களாகச் சில ஆயிரம் பேர் சேர்த்து விட்டால் போதும். அவர்களை நமது குருதேவர் ஏட்டறிவும், பட்டறிவும் நேரடிப் பயிற்சியால் வழங்கி உண்மையான தலைவர்களாக உருவாக்கிடுவார். அப்படி நன்கு உருவாக்கப் பட்டவர்கள் ஊர் ஊராக, கிராமம் கிராமமாக, அலுவலகம் அலுவலகமாக, தொழிற்சாலை தொழிற்சாலையாகச் சென்றிடுவார்கள், செயல்படுவார்கள்.

அதனால் உண்மையான சமய சமுதாய அரசியல் பொருளாதாரப் புரட்சிகளை அமைதி வழியில் "அண்ணல் மகாத்மா காந்தியின் அன்பு வழியில்" செயலாக்கக் கூடிய தொண்டர்கள் உருவாக்கப் படுவார்கள். இந்திய தேசத் தந்தை மகான் மகாத்மா காந்தி பசனைப் பாடல் பாடித்தான் விடுதலைப் போரில் வெற்றி பெற்றார். மறுப்பவர் தோன்றும் வரை நாம் மதத்தின் வழியாகப் புரட்சியை முடித்து விடுவது எளிது. அதன்பின் தொழில் புரட்சி, பண்பாட்டுப் புரட்சி, ஆட்சி இயந்திர மாற்றப் புரட்சி.... முதலிய அனைத்தையும் மின்னல் வேகத்தில் செய்து முடித்திடலாம். அனைத்தையும் முழுமையாக

வெற்றியாக்கிடத் தாத்தாக்கள் ஆத்தாக்கள் இருக்கிறுர்கள். திருவுள ஒப்புதலும், குருவுளச் சம்மதமும் பெற்று; இறைவர்கள், கடவுள்கள், தெய்வங்கள், தேவியர்கள், தேவர்கள், தேவதைகள், வானவர்கள், அமரர்கள், இருடிகள், முனிகள், முனீசுவரர்கள், கணங்கள்..... முதலிய அனைவரின் முழுமையான ஒத்துழைப்போடு செயல்படும் நமது குருதேவர் ஞாலகுரு, குருமகா சன்னிதானம், சித்தர் கருவூரர் இருக்கிறுர். நாம் வெல்வோம்! வெற்றி நமதே! உடன் நகல். நகலைக் குருதேவருக்கும் அனைவருக்கும் அனுப்புக.

சித்தரடியார்
சோ.இரவீந்திரன்,
28.10.81.

**<u>கையெழுத்து நகல்கள் தயாரிக்கும் பொறுப்பு:</u>**

சித்தரடியான் C.துரைச்சாமி,
பிடாரி அம்மன் சன்னிதானம்,
திருவையாறு.

**<u>அருளுரைச் சுருக்கம் எழுதியவர்:</u>**

சித்தரடியான் சோ. இரவீந்திரன்.

**//உண்மை நகல்//**

**//மூலம்: திருவையாறு சித்தரடியான் திரு துரைச்சாமி அவர்களின் கையெழுத்தில் இருந்திட்ட நகல்.//**

# அருட்பணி செயல் விளக்க அருளுரை அஞ்சல்

**10-11-82இல் ஞாலகுரு சித்தர் கருவூரர் நேரடியாகப் புதுக்கோட்டை சித்தரடியான் S.கருப்பையா, சித்தரடியான் D.யோகராசு, பொற்பனைக் கோட்டை அருட்சேனைத் தளபதி [5/7, வடக்குத் தெரு, புதுக்கோட்டை-622001] அவர்களுக்கு விடுக்கும் அ.செ.வி.அ.அஞ்சல்!!**

1) தாத்தாக்கள், ஆத்தாக்கள் அருளால் யாவும் நலமாகின்றன! வெற்றியாகின்றன! பயன் நல்குகின்றன!

2) நமது இயக்க மரபுப்படி;

நீங்கள் எழுதும் அஞ்சல்களிலும், அனுப்பும் நகல்களிலும், கட்டுரை, செய்திகளிலும்..... மிகமிகத் தெளிவாகத் தேதி, கிழமை, மாதம், ஆண்டு, தெளிவான இருப்பிட முகவரி முதலியவை இருக்க வேண்டும். ≡ குருவாணை.

யாருடைய அஞ்சல் உங்களுக்கு வந்தாலும், விரைந்து உடனே அதன் நகல்கள் இரண்டு குருதேவருக்கும், ஒரு நகல் காரியேந்தல் பட்டிக்கும், ஒரு நகல் உங்களின் பொது கோப்பிலும் [பிறர் படிக்கத் தரும் கோப்பு ≠ நீங்கள் பாதுகாக்கும் கோப்பில் சில அஞ்சல்கள் இருக்க வேண்டும்] இடம் பெறல் வேண்டும். [1+1=2x2 கார்பன் நகல்கள் உடனே எடுத்தல் தேவை.]

உங்களிடமிருந்து நகல் வராததால்தான் யாம் உடனே உங்களுக்கு அஞ்சல் அனுப்பவில்லை. மேலும் மிகத் தெளிவான செயல் திட்டங்கள் ஒன்றிரண்டும்; அருட்பணி விரிவாக்க மடல் ஒன்றும் அனுப்பினோம் யாம். இன்று வரை பதிலில்லை. இப்போது அருட்பணி

விளக்க மடலின் நகல் மட்டுமே அனுப்பியுள்ளீர்கள். இது வருத்தத்தை, வேதனையை வழங்குகிறது. இனிமேலாவது உடனுக்குடன் நகலும், அஞ்சலும் அனுப்புக. “நாம் ஒரு மாபெரும், முறையான, தெளிவான உலக வரலாறாக வளர்ந்து வருகிறோம். .....” என்ற நினைப்பில் சுறுசுறுப்புடன் செயல்படுக.

3) நீங்கள் 28.10.82இல் கொட்டாம்பட்டி சென்று சனீசுவரருக்குரிய சிறப்புப் பூசையில் கலந்து கொண்டதைப் பாராட்டுகிறோம். அடிக்கடி காரியேந்தல்பட்டி செல்லுக. அஞ்சல் வழியாக வீரமாகாளி சன்னிதானத்துடன் தொடர்பு கொள்ளுக. விளக்கங்களையும், செயல்முறைகளையும், சட்டதிட்டக் கட்டுப்பாடுகளையும் தெரிந்து, புரிந்து செயல்படுக! வெற்றி பெறுக!! வளர்க!!! வாழ்க!!!!

4) 1.11.82 முழுநிலவு நாளிலிருந்து கலசப் பூசையைத் துவங்கியிருப்பதற்கு எமது அருளும், உலக அருளாளர் அருளும், தாத்தாக்கள் ஆத்தாக்கள் ஒப்புதலும், திருவின் சம்மதமும் வழங்கப் படுகின்றன. **“தனி மனிதர்கள் அருள்நீர் நிறைந்த கார்மேகங்களாக அருள்மழை பொழிதல் வேண்டும். அப்பொழுதுதான் அருள்நீர் எங்கும் ஊற்றெடுத்து தாகங்களையும், பசிகளையும் தணிக்க வகை செய்யும்”** - என்ற குருபாரம்பரிய வாசகத்தையே உங்களுக்கு அருளார்ந்த அறிவுரையாக வழங்குகிறோம்.

5) **“.... மானுடர்களில் தேவர்கள், தேவகுமாரர்கள், தேவதூதர்கள் பிறப்பெடுத்துத் தொண்டாற்றுவது பதினெண்சித்தர்களின் அருட்பணித் திட்டமே. பதினெண்சித்தர்களின் நேரடி விந்து வழி வாரிசுகளால்தான் ‘அறிவுரை’, ‘அருளுரை’, ‘அறிவார்ந்த அருளுரை’, ‘அருளார்ந்த அறிவுரை’ வழங்க முடியும்! முடியும்!! முடியும்!!! இவற்றின் பயனாகத்தான் இந்திய மண்ணில் அருளாளர்கள் வாழையடி வாழையாகத் தோன்றிச் செயல்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள். ‘தமிழினம் அருளாளர்களின் தாய்’; ‘தமிழ்மொழி அருளாளர்களின்**

**விழி, உயிர், செயல், சிந்தனை...'; 'தமிழகம் ஒரு கடவுளர் நாடு'.... எனவேதான், தமிழர்களில் நாயன்மார்களும், ஆழ்வார்களும், மௌனிகளும், ஞானிகளும், தவசிகளும், மறையோர்களும், முறையோர்களும், நெறியோர்களும், வேதியர்களும், தவமுனிகளும், இருடிகளும், சித்தியார்களும்..... தோன்றிக் கொண்டே இருந்துங் கூட மக்களிடையே புதிய அருளாசையை, அளப்பரிய அருளார்வத்தை உருவாக்கவே முடியவில்லை. எந்த அற்புதமும், வியப்பும், மாயமும், மந்திர தந்திர எந்திரச் செயலும்.... தமிழர்க்கு வியப்பாக இருந்ததில்லை. இப்படிப் பட்ட தமிழர்களை ஒன்று திரட்டி ஒற்றுமைப் படுத்தினால்தான் '<u>உலக அருளாட்சி</u>' அமைக்க முடியும்! முடியும்!! முடியும்!!!...."** என்ற குருபாரம்பரிய வாசகத்தை மட்டுமாவது அச்சிட்டுப் பலருக்கும் வழங்குங்கள்.

6) **"...... உலகில் தமிழகத்தைத் தவிர அருளாளர்கள் தோன்றுவது அரிது. அதிலும் இந்தியாவைக் கடந்து தோன்றிட்ட அருளாளர்கள் மிகச் சிலரே. அதனால்தான், மகப்பேறு இல்லாப் பல குடும்பங்களிடையே பிறந்த ஒரு மகவு சீராட்டி, பாராட்டி வளர்க்கப் படுவது போல கன்பியூசியசும், சொராசிட்டரும், ஈசாவும்(இயேசு), முகம்மது நபியும்..... அவர்களது காலத்திலேயே விரிந்த செல்வாக்கைப் பெற்றனர். அவ்வருளாளர்களுக்குப் பிறகு விரைந்த வளர்ச்சி உருவாகி உலகம் முழுவதும் பரவிற்று. ஆனால், தமிழக இனம் பிறந்த குமரிக் கண்டத்துக்கு அருள் மழையாக விண்வெளி அண்டங்களிலிருந்து பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளும் வந்து தங்கி அமிழ்தான தமிழில் அருள் மழையை வழங்கினர். அன்று முதல் என்றென்றும் பத்தியாளர்கள், சத்தியாளர்கள், சித்தியாளர்கள், முத்தியாளர்கள் காடு போல் தழைத்து வருகின்றனர் தமிழினத்தில். அதனால், தமிழர்கள் அருளாளர்களைப் போற்றிப் பேணிப் பயன்படுத்தி தாங்களும் உய்வடைந்து, பிறரையும் உய்வடையச் செய்யும் பணியைச் சிறப்பாகச் செய்யாமல் உறங்கும்**

**உணர்வைப் பெற்று விட்டார்கள். எனவேதான், நாற்பத்தெட்டு வகைச் சித்தர்களும், பதின்மூன்று வகை அருளாளர்களும் .... தொடர்ந்து பழமையான வழிபாட்டு நிலையங்களைப் போற்றிப் பாதுகாப்பதோடு; புதிய புதிய வழிபாட்டு நிலையங்களைத் தோற்றுவித்துக் கொண்டே வருகிறார்கள்.**

**இருந்தும் தமிழர்களின் அருளுலக வாழ்வு அடிக்கடி இருள் நிறைந்ததாகி விடுகின்றது. இதனைத் தடுத்து தமிழர்களின் அருளுலக வாழ்வு ஒளி நிறைந்ததாகச் செய்யவே குருபாரம்பரியம், திருவாசகம், கருவாக்கு, கருவாசகம், அருள்வாக்கு, அருள்வாசகம், மருள்வாக்கு, மருள்வாசகம், எள்ளல் மாலை, ஏசல் மாலை, வணக்க மாலை, கும்பிடு மாலை, வழிபாட்டு மாலை, தொழுகை மாலை, அழுகை மாலை, அரற்றல் மாலை, புலம்பல் மாலை, கோள் மாலைகள் (ஞாயிறு மாலை, திங்கள் மாலை, செவ்வாய் மாலை, புதன் மாலை, வியாழன் மாலை, வெள்ளி மாலை, சனி மாலை, இராகு மாலை, கேது மாலை); சூத்திரம், சூத்திறம், சூத்தரம், சாத்திரம், சாத்திறம், சாத்தரம், தோத்திரம், தோத்திறம், தோத்தரம், மந்திரம், மந்திறம், மந்தரம், எந்திரம், எந்திறம், எந்தரம் [ஏந்தரம் பாடவேறுபாடு அல்லது தனிக்கலை உண்டு], தந்திரம், தந்திறம், தந்தரம், மாந்தரம், மாந்தரீகம், தாந்தரம், தாந்தரீகம், ஏந்தரம், ஏந்தரீகம், நிடதம், இணை நிடதம், துணை நிடதம், நான்மறை, நான்முறை, நானெறி, நான்வேதம், மறை, மறையாந்தம், முறை, முறையாந்தம், நெறி, நெறியாந்தம், வேதம், வேதாந்தம், சித்தம், சித்தாந்தம், நாதம், நாதாந்தம், போதம், போதாந்தம், ஆகமம், மீமாம்சை ..... முதலியவைகளை மானுட இனத்துக்குப் பதினெண்சித்தர்கள் தங்களது மொழியான அமிழ்தத் தமிழில் வழங்கினார்கள். இப் பேருண்மையினைத் தெரிய, அறிய, ஆராய, புரிய, தெளிய, உணர, நம்பத் தமிழர்களைப் பக்குவப் படுத்தவே பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தோன்றுகிறார்கள்....."**

\- குருபாரம்பரிய வாசகம்.

7) **"…. பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் தமது 200 ஆண்டுகளின் முயற்சிகளின் அயர்ச்சியால் நிலையான அருளுலகக் காப்புக்காகத் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டினார். இவ் வழிபாட்டு நிலையம் அருளுலகச் செழிப்பை வளர்க்க முடியாது போனால், தொடர்ந்து அருளுலகச் செழிப்பை விழிப்பாகக் காத்திட ஏட்டுலகில் நிலையான கோயில் ஒன்றையும் கட்டினார். இக்கோயில் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் சித்தர் அமராவதி ஆற்றங்கரைக் கருவூரார் தேடிச் சென்று கொணர்ந்து பதினெட்டு ஆண்டு வளர்த்த தேவகுமாரன் ஈசாவும், முகம்மது நபியும் பன்னிரண்டு அடியான்களை உருவாக்கியது போல் இவர் பன்னிரண்டு நூல் தொகுதிகளை 'பன்னிரு திருமுறைகள்' உருவாக்கும் பணியினைத் துவக்கினார்…"**

[துவக்கினார் ≡ என்பதால் இவர், பன்னிரண்டு நூல்களையும் முழுமையாகப் பட்டியலிட்டார் என்று கருதவே முடியாது.] இவரது மகன் கருவூர்த் தேவரே இப் பன்னிரண்டு நூல்களையும் கங்கை கொண்ட சோழபுரக் கோயிலில் தொகுத்து **'அருளுலக அரங்கேற்றம்'** செய்தார். இவர் தம் மகனான திருமாளிகைத் தேவரின் [காவிரியாற்றங்கரைக் கருவூராரின் பேரனே திருமாளிகைத் தேவர்] பாடல்களையும் இந்தப் 'பன்னிரு திருமுறை' தொகுப்பு நூலில் சேர்த்தார். இவரே, "பன்னிரண்டு என்ற எண்ணிக்கை முருகனின் கண்களை நினைவு படுத்துகின்றன….." எனச் சில இடங்களில் எழுதுகிறார்.

இவரே "**… பன்னிரண்டு மனிதர்களை அடியான்களாக உருவாக்கிய அருளாளர்கள் வெற்றி பெற்றது போல் தமிழர்களுக்கிடையில் வெற்றி பெற முடியாது என்பதை நாயன்மார்கள், ஆழ்வார்கள், நாற்பத்தெட்டு வகைச் சித்தர்கள்….. உருவாக்கிய ஆயிரக்கணக்கான**

**அடியார்கள் அனைந்த யாக விறகுகளாகி விட்டதை அறிந்தார். அதனால்தான் மனிதர்களை அருளுலக இருளகற்றும் அணையாச் சுடர்களாக ஆக்கத் திட்டமிட்டார். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் தொகுக்கப் பட்டவுடன் அவரை (*நாதமுனி அவர்களை*) அழைத்து வந்து மரியாதைகள் செய்து; அவர் விரும்பிய ஐம்பொன் சிலைகளை வார்த்து வழங்கி; அவரின் தொகுப்பைத் தமது பன்னிரு திருமுறை நூல் பட்டியலில் முதல் நூலாக ஏற்றார். ஆனால், பிற்காலத்தில் திருமால் வழிபாடு வைணவம் என்று தனிச் சமயமாக வளர்ந்து சிவநெறிக்குப் பகையானதாகவும், மறுப்பானதாகவும், எதிர்ப்பானதாகவும், வேறானதாகவும்..... செயல்பட்டிட்டது. இப் பகையைச் சிவநெறிச் செல்வர்களான சோழர்கள் எப்பாடுபட்டும் நெறிப் படுத்தவே முடியவில்லை. அதனால் முதல் நூலான நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தை விடுத்தே 'பன்னிரு திருமுறைப் பட்டியல்' தயாரிக்க வேண்டியதாயிற்று. அதற்குச் சேக்கிழார் பெருமானின் 'திருத்தொண்டர் புராணம்' உதவி செய்து பெருமை பெற்றது. அதனால், 'பெரிய புராணம்' (பெருமைக்குரிய புராணம்) என்றாயிற்று. குருபாரம்பரியத்தின் நிறைவு பன்னிரு திருமுறைப் பட்டியலாகிறது..... இனிக் குருபாரம்பரியம் எழுதுவார் எவர்? தமிழினக் கருவான குருபாரம்பரியம் காப்பார் எவர்? கடல் கடந்த நாடுவாழ் கன்னித் தமிழரே குருபாரம்பரியம் காத்தற்குரியார்...."** - குருபாரம்பரிய வாசகம்.

இதன்படி, கருவூர்த் தேவர் குருபாரம்பரியச் செப்பேடுகளையும், ஓலைச் சுவடிகளையும் கடல் கடந்த நாடுகளுக்கு அனுப்பினார் என்ற வரலாற்றுப் பேருண்மை புலனாகின்றது.

8) நண்பர்களே! '<u>குருபாரம்பரியத்தை முழுமையாக வெளியில் கூறக் கூடாது</u>' என்ற தடையும், '<u>யாரும் குருபாரம்பரியத்தை முழுமையாகக் கேட்கக் கூடாது [தெரிதல், புரிதல்]</u>' என்ற தடையும்

விதிக்கப் பட்டுள்ளன. எனவேதான், யாம் அவ்வப்போது நமது நண்பர்களுக்குக் குருபாரம்பரிய வாசகங்களை தனித் தனி நூல்களாகத் தொகுத்தும்..... எம்மால் முடிந்தவரை எதையும் பொதுமக்கள் தெரியாத இரகசியம் என்று காக்காமல் செயல்படுகிறோம். இதேபோல் யாம், எவ்வித சாதி, சமய, இன, மொழி, நாட்டு... வேறுபாடு கருதாமலேயே அருளுலக வாரிசுகளை உருவாக்கி வருகின்றோம்.

ஏனென்றால், குருபாரம்பரிய வரலாற்றுப்படி, எம் காலத்தில் அருளாட்சி அமைந்தே தீர வேண்டும். இதனைத் தஞ்சைத் தாத்தாவின் ஆணை வழிக் கல்வெட்டுகளும் வலியுறுத்துகின்றன. எமக்குக் கிடைத்து வரும் <u>வெற்றிகளும், தோல்விகளும், தோல்வி மாற்ற வெற்றிகளும்....</u> எம்மால் அருளாட்சி அமைக்க முடியும் என்ற கருத்தைத் தெளிவாக்குகின்றன. இப்போது, <u>தாத்தா கருவூர்த் தேவரின் முதன்மையான மாணாக்கர்களின் மறுபிறப்புக்களான நீங்கள் கிடைத்திருக்கிறீர்கள்</u>. உங்களுக்குப் பழம்பிறப்புக்கள் பற்றிய நினைவுகள் மலர மலர, வளர வளர, செழிக்கச் செழிக்கப் பல வரலாற்றுப் பேருண்மைகள் வெளிப்பட்டிடும். அவற்றால் சமய, சமுதாய, அரசியல் நன்மைகள் பல விளைந்திடும். எனவே, நீங்கள் ஆர்வமுடனும், அறிவுடனும், அக்கரையுடனும், பெருமுயற்சியுடனும் பதினெண்சித்தர்கள் வழங்கியுள்ள ஞானங்களையும், விஞ்ஞானங்களையும், பிற அறிவியல் கலைகளையும் கற்றுத் தேர்ந்து பயிற்சி செய்ய முற்படுங்கள். உங்களுடைய அநுபவங்களால்தான் இந்து மதத்தின் அருமை, பெருமைகள் மக்களுக்குப் புரிவிக்கப்படல் வேண்டும்.

9) நண்பர்களே! நமது நாட்டில் ஏழைகள் மிகுதியாகிக் கொண்டே போகிறார்கள். இந்தப் போக்கைத் தடுத்து நிறுத்தி ஏழைகளே இல்லாத ஒரு சமுதாயத்தை நம்மைப் போன்ற அருளாளர்களால்தான் அமைக்க முடியும். ஆனால் சீர்திருத்தம், புரட்சி என்று கூறிக் கொண்டு அயோக்கியர்களும், சுயநலக் காரர்களும், வெறியர்களும்.....

நம் நாட்டுப் பண்பாட்டுப் பாரம்பரியக் கூறுகளையும், அவற்றின் நிலைக் கலன்களையும், செயலகங்களையும், ஆணிவேர்களையும்... சிதைத்து வருகிறார்கள். இப்படிப்பட்ட நேரத்திலேதான் நாம் மிக வலுவோடும், நிறுவன நிர்வாகக் கட்டமைப்போடும், தெளிவான சட்டதிட்டக் கட்டுப்பாடுகளோடும் செயல்பட்டாக வேண்டும்.

இன்று புகழ் வெறியர்களும், பதவி வெறியர்களும், அதிகார வெறியர்களும் தலைமையேற்று அகம்பாவத்தோடும், ஆணவத்தோடும் வாழுகிறார்கள். இவர்களின் தன்னல மோகமும் வேகமும் இவர்களைச் சமுதாய விரோதிகளாகவும், துரோகிகளாகவுமே ஆக்கி வருகின்றன. எனவே, இவர்களைத் திருத்த முற்படுவதை விடப் புதிய நல்லவர்களை வல்லவர்களாக்கி அனைத்திலும் தலைமை தாங்கச் செய்வதே நல்லது. அதுதான் அருளாட்சி அமைக்கும் முயற்சிப் பணி. இப் பணியின் அடிப்படை செயல்திட்டமே அருட்பணி விரிவாக்கத் திட்டம். எனவே, பலரோடும் அஞ்சல் தொடர்பு கொண்டும், நேரில் நெஞ்சம் திறந்து பழகியும் அருட்பணி விரிவாக்கத் திட்டத்தைப் புரிந்து செயல்படுங்கள். விரிவஞ்சி இத்துடன் அஞ்சலை நிறைவு செய்கிறோம். உடனே நகல்கள் அனுப்பவும். **குருவாணை**.

(ஒப்பம்)

**ஞானகுரு அன்பு சித்தர் கருவூரார்**,

23.11.82.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: கையெழுத்துப் பிறதியாகக் கிடைத்தது. இந்த நகல் கும்மிடிபூண்டி சித்தரடியார் திரு ஏ.இரவி அவர்களின் கோப்புகளிலும் கிடைத்தது.//**

# தாந்தரீகப் பூசை விளக்க மடல்

பதினெண்சித்தர்கள் காற்ரேடு காற்ருகக் கலந்திருக்கும் தெய்வீக அணுக்களை (The Divine Atoms) மனித உடலுக்குள் செலுத்திக் குறிப்பிட்ட மனிதருக்கு எல்லா நன்மைகளும் "இயற்கை கடந்த மனிதர்" (The Super Men) என்ற நிலையை உருவாக்கும் முறையாக வகுத்ததுதான் இந்தத் தாந்தரீகப் பூசை.

அச்சம், கூச்சம், இச்சை, ஆச்சரியம், மாச்சரியம், வெறுப்பு,..... முதலிய உணர்வுகளைக் கடந்து குருவிடமும், குருவின் வாரிசுகளிடமும், குருவின் பதிலிகளிடமும் இப்பூசைகளை செய்து கொள்ளலாம். பிறப்பு இறப்பு வெல்லும் முயற்சியின் முதிர்ச்சியே இப்பூசை. உருவ, அருவ, அருவுருவங்களைத் தெரிந்து தொடர்பு கொள்ளும் முயற்சியின் முதிர்ச்சியே இது. உடலும், உள்ளமும் பூக்கும் புதுமலரின் மணமும், இனிமையும் பெறும் முயற்சியின் முதிர்ச்சியே இது. பதினெண்சித்தர்கள் பெண்களைச் சத்தியாகவே ஏற்று வழிபட்டனர் என்பதையும்; கல், மண், மரம், உலோகம், ... முதலிய பொம்மைகளைக் கடவுளாக்கியது போல் உயிரும், உணர்வும், அறிவும் உள்ள பெண்களைக் கடவுளாக்கினர் என்பதையும் விளக்குவதே தாந்தரீகப் பூசை.

அளவுக்கு அதிகமான பொறுமை, பொறுப்பு, துணிவு, கனிவு, கூர்மை, நேர்மை, சீர்மை, குருவின் நம்பிக்கையும் வாழ்த்துதலும் பெற்ற நிலை, ... முதலியவைகளைப் பெற்றவர்களே தாந்தரீகப் பூசை செய்ய முடியும். மண்ணிலும் விண்ணிலும் நிறைந்துள்ள தெய்வீக சத்திகள் அநுபவப் பூர்வமாகப் பெண்ணின் உடலில்

தேக்கிப் பிறகு தேவைக்கேற்ப எடுத்து வழங்கும் அருட்கொடைத் திட்டமே **தாந்தரீகப் பூசை**.

இதனைப் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியால்தான் குருவின் விந்துவழி வாரிசுகளல்லாத சாதாரணப் பொதுமக்களும் பெறுவார்கள். அக்காலத்திலேயே, மனிதர்களில் பலர் கடவுள்களாக ஆக்கப்படுவார்கள். இம்மாபெரும் வாய்ப்பை ஊழ்வினை, விதி, ஓகம், ... உள்ளவர்கள்தான் அநுபவிக்க முடியும். உலகியல் கடந்து குருவிடம் தங்களை முழுமையாக ஒப்படைக்கும் **'சரணாகதி நிலை'**யினரே தாந்தரீகப் பூசைகளில் வெற்றி பெறுவர்.

மனிதப் பிறவியின் பயன், உண்மைநிலை, ... முதலிய அனைத்தையும் உணரச் செய்வதே தாந்தரீகப் பூசை. பதினெண்சித்தர்களின் தாந்தரீகப் பூசை ஏட்டில் எழுதப் படாதது. ஆரிய மாயையாகப் பல தாந்தரீகப் பூசைகள் உள்ளன. எனவே, பாரம்பரிய சித்தர்களிடம் தாந்தரீகப் பூசைகளை அறிக. குருவால் இட்டும் தொட்டும் சுட்டியும் அருள் வழங்கப் படுபவரே முழுமையான அருள்நிலைகளைச் சித்தி செய்து கொள்ள முடியும்.

குருபாரம்பரிய வாசகம், குருவாசகம், குருவாக்கு வரிகள்.

**ஞாலகுரு,**
**குருமகாசன்னிதானம்,**
**சித்தர் கருவூரர்,**
**1.3.83.**

**//உண்மை நகல்//**
***நகல் எடுத்தவர்: சித்தரடியார் ஏ.இரவி.***

**//மூலம்: கும்மிடிப்பூண்டி சித்தரடியார் திரு ஏ.இரவி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

தலைமை அலுவலகம்,
குருதேவர் இல்லம்,
23-2-1985,
சென்னை-11.
காலை: 8:45 மணி.

# “குருநிலைச் செயல் விளக்கக் குருவாக்கியம்”

எழுதாக்கிளவியாக வாழும் குருவாக்குகள் அந்தந்தக் காலத்தின் தேவைக்கேற்பப் பதினெண்சித்தர் பீடாதிபதிகளும், அவர்களின் விந்துவழி வாரிசுகளும் குருவாக்குகளை குருவாக்கியங்களாக ஏட்டில் எழுதி, உரிய பக்குவமுடையவர்களுக்கு மட்டும் வழங்குவது மரபு.

தாத்தா காக்காவழியன் பண்ணையாடி சித்தர் காக்கையர் எனப்படும் காகபுசுண்டர் இ.ம.இ.யின் இரண்டாவது பாரம்பரியத் தலைவர் **குருநிலைச் செயல்விளக்கக் குருவாக்கியமாக வழங்கியன இவை.**

1. பதினெண்சித்தர் பீடாதிபதிகளும், இவர்களின் விந்துவழி வாரிசுகளும், காலத்தின் தேவையால் தோற்றுவிக்கப்படும் பதினெண்சித்தர் பீடத்தின் பதிலிகளும்; அருளுலகில் திருக்கூட்டத்தார்களுடன்தான் உலா வந்து அருட்பணிகளை ஆற்ற வேண்டும்.

2. குருநிலையில் இருப்பவர் 48 வகையான அருட்பட்டங்களுக்கும் உரியவரை உருவாக்கி கருவாணை, குருவாணை, தருவாணை, திருவாணை எனும் நான்கு வகையான ஆணைகளை வழங்கி மேற்படி அடியான்கள், அடியாள்கள், அடியார்கள் மூலமாகத்தான் செயல்பட வேண்டும்.

3. குருநிலையில் உள்ளவர்கள் அவசர அவசியம் கருதி இட்டும் தொட்டும் சுட்டியும் உருவாக்குபவர்களில் பெரும்பாலானவர்கள்

வீணுகிடுவார்கள். எனவே, அருள் வழங்குவதற்கு முன் உரியவரின் ஆவி, ஆன்மா, உயிர் என்ற மூன்றையும்; ஊழ்வினை, ஆள்வினை, சூழ்வினை, வினை என்ற நான்கினையும்; முற்பிறப்பு, இப்பிறப்பு, மறுபிறப்பு என்ற மூன்றினையும்; உலகியலுக்குட்பட்ட பாரம்பரியம், கல்வி, கேள்வி, பயிற்சி, தேர்ச்சி, முயற்சி எனும் ஐந்தினையும்; சிந்தைத் தெளிவு, நெஞ்ச வலிமை, உணர்வுத் தரம், செயல் வீரம் ஆகிய நான்கையும்; நன்கு ஆராய்ந்தே அருள் வழங்க வேண்டும். போர்க்காலத்தில் விதிவிலக்குண்டு.

4) உலாவரும் காலங்களில் வழிபாட்டு நிலையத் திருப்பணிகள் என்றால்தான்; திருக்கூட்டத்தாருடன் அமுது செய்து பணியாற்ற வேண்டும். மற்றக் காலங்களில் அணுக்கத் தொண்டன், ஓலைநாயகம், ஞானக்காட்சியாளன், அருட்கணிப்பாளன், பூசாறி, மெய்ச்சேவையோன் ... எனும் சிலரோடு மட்டுமே அமுது செய்து அருட்பணியாற்ற வேண்டும்.

5) தனிமனித இல்லங்களுக்கு அருள் வழங்கிட இல்லம் புகும்பொழுது முதல் மறுநாள் அப்பொழுது வரும் வரை நாளோலக்கத்திலும், திருவோலக்கத்திலும் ஒப்புதல் பெற்றே ஓலைநாயகம், அணுக்கத் தொண்டன், பூசாறி, அருளாளி, ... என நால்வருக்கு மிகாமல், நான்மறையாக, நான்முறையாக, நானெறியாக, நான்வேதமாக சூழ உடன்வைத்து அருள் வழங்க வேண்டும்.

6) தனிமனிதர்களுக்கு அருள் வழங்கல் ஆண் பெண் என்ற வேறுபாடின்றி குருபாரம்பரிய உறுதிமொழிகளை ஓலைநாயகத்திடம் எழுதிக் கொடுத்து வாசித்துப் புரிந்து கையொப்பமிடச் செய்தல் வேண்டும். அதன்பிறகே, அவசர அவசியத்தை முன்னிட்டு 8, 16, 32, 48 என்ற நான்கு வகையான எல்லைக்குட்பட்ட நாட்கள் ஏற்கெனவே பயிற்சி பெற்ற அடியான், அடியாள், அடியார் சிலரால் ஏட்டறிவும், பட்டறிவும் வழங்கப்பட்டுப் பக்குவப்

படுத்தப்பட்ட பிறகே தனிமையில் இட்டும் தொட்டும் சுட்டியும் அருள் வழங்க வேண்டும். மூடிய அறைக்குள் ஒளிரும் குத்து விளக்கும், கலசமும் அருள் உலகத் தொடர்புகளை உருவாக்க அருள் வழங்க வேண்டும்.

7) அருட்பணி விரிவாக்கத் திட்ட நிலையங்களை அந்தந்தப் பட்டி, கிராமம், சிற்றூர், பேரூர், கூற்றம் என்ற சிறிய எல்லைகளுக்கு உட்பட்ட சொந்தக்காரர்களையே அருட்பட்டத்துக்குரியவர்களாக்கிச் செயல்படுத்த வேண்டும். இவர்கள், மிகப்பெரிய காரண காரியங்களில்லாமல்; அதாவது, குருவாணையிடப்பட்டு அழைக்கப் படாமல் அல்லது அனுமதிக்கப் படாமல் தங்களுக்கு உரியதல்லாத அருட்பணி விரிவாக்கத் திட்ட நிலையங்களில் சென்று செயல்படக் கூடாது.

8) அருட்கணிப்பாளர், அருளாளி, மருளாளி, அருளாடு நாயகம், மருளாடு நாயகம், ஞானக்காட்சி காண்போர், சாத்திறியார், பூசாறியார், யாகாவியார், ... முதலியோர் புதிய அ.வி.தி. நிலைய அமைப்புக்களுக்காகவும், தனிமனித இல்லம், தொழில்கூடம், பொது வழிபாட்டு நிலையம்... முதலியனவற்றின் புத்துயிர்ப்புக்களுக்காகவும்; குருவாணை பெற்று கூற்றம், பேரூர், சிற்றூர், கிராமம், பட்டி, தொட்டி, தீவு, பாழிடம், வாழிடம், ... முதலிய அனைத்து எல்லைகளையும் கடந்து எல்லா இடங்களுக்கும் சென்று பணியாற்றிடக் குருவாணை பெற்றிடல் வேண்டும். குருவின் நாளோலக்க திருவோலக்க அருளாட்சிப் பொழுது அறிந்தே அ.வி.தி. தொண்டர்கள் அனைவரும் செயல்படல் வேண்டும். குருவாணையின்றியோ, குருவின் அழைப்பு இன்றியோ அருட்பட்டத்தார் யாரும் குருவைக் காண வரக்கூடாது. குருவுடன் உலாக்கள் மேற்கொள்ளக் கூடாது.

9) குருநிலையில் உள்ளோர் மலைமுகடு, அடர்காடு, நீர்நிலைக் கரை, இருள்படர் குகையன்றிக் குடில் என்ற நான்கு இடங்களன்றி

வேறு இடங்களில் அருளுரையோ, அருளார்ந்த அறிவுரையோ, விசுவ வடிவமோ, தோற்ற மாற்ற ஏற்ற சித்துக்களோ நிகழ்த்துதல் கூடாது. அடியான், அடியாள், அடியார் என்ற மூன்று நிலையினரும் இந்நான்கிடம் அல்லது வேறு இடங்களில் குருவின் மெய் தீண்டல் ஆகாது.

10) குருநிலையில் உள்ளோர் உரிய பக்குவம் பெற்றோரிடம் மட்டுமே உறையுள், உடை, உணவு, உறுபொருள் எனும் நான்கினையும் காணிக்கையாக அறிவிப்புச் செய்து விதிவயப்பட்டோர் வழங்குவதை மட்டுமே ஏற்க வேண்டும். அன்றி மூவாசைகளைப் பேராசைகளாக வளர்த்துக் கொண்டிட்ட குறையுடையாரிடம் குருகாணிக்கை பெறக் கூடாது.

11) குருநிலையில் உள்ளோர் படிப்படியாக பக்குவங்களுக்கேற்பவே பத்திநிலை, சத்திநிலை, சித்திநிலை, முத்திநிலை எனும் நான்கினையும் வழங்கிடல் வேண்டும். மலையேறுங்கால் விடரகங்களிலும், சரிவுகளிலும், குகைகளிலும் இழிந்திடுவோர் போல்; அருள்நிலை பெற முயற்சிக்கும் போதே கலங்கியும் கலக்கியும், திரிந்தும் திரித்தும், குறை கூறிக் குருவை விட்டு விலகிச் செல்பவர்களை தண்டிக்காமல், கண்டிப்பாணை கொடுத்து விலக்கிடல் வேண்டும். அவர்கள் பெற்ற அரைகுறை அருளுலக அநுபவங்கள் பொருளுலகத்தார்க்குத் தீங்கு விளைவித்திடாமல் உரிய தடுப்பு ஆணைகள், எச்சரிக்கை அறிவிப்புக்கள் பெரிய அளவில் உடனுக்குடன் விடுக்கப் பட்டாக வேண்டும்.

12) குருநிலையில் உள்ளவர்கள் புதிதாக குருகுலங்கள், ஞானப் பள்ளிகள், தவச் சாலைகள், ஐந்தீவேட்டல் கூடங்கள், முத்தீ ஓம்பல் மன்றங்கள், அருட்கோட்டங்கள், அருளாளர் சோலைகள், பத்திப் பாட்டைகள், சித்தி ஊற்றுக்கள் ... முதலியவைகளை உருவாக்கி தேவையான அளவுக்கு மேலாகவே அடியான்கள், அடியாள்கள், அடியார்கள் முதலியோரை உருவாக்கித் துணிவோடும்,

தெளிவோடும், முறையாகவும், முழுமையாகவும் பதினெண்சித்தர்கள் படைத்த இலக்கியங்களை ஏட்டறிவாகவும், பட்டறிவாகவும் வாழையடி வாழையென வழங்கிடத் திட்டமிடல் வேண்டும். அதற்குரிய பயிற்சிகளையும், முயற்சிகளையும் சட்டதிட்டக் கண்டிப்புக்களோடும், தண்டனைகளோடும், வெற்றி தோல்வி பற்றிய கவலையின்றி நிலைநிறுத்த வேண்டும்.

<u>**குறிப்பு**</u>:- இப்பன்னிரண்டையும் திருமந்திற ஓலைநாயகம் பரமாச்சாரியார், அ.வி.தி. தலைமைச் செயலாளர் அவர்கள் அருளாட்சித் தாக்கீதாக அனைவருக்கும் வழங்க ஆணையிடப்படுகிறார்.

**அன்பு**
**இந்துமதத் தந்தை, ஞானாச்சாரியார்,**
**குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் கருவூரார்.**
**23/2/85.**

**//உண்மை நகல்//**

**//இதன் மூல நகல்: சித்தரடியான் திரு பெ.சௌந்தரராசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**



மெய்ஞ்ஞானக் கொடி

# யாகப் பெருவிழா

ருத்ரோத்காரி ஆண்டு [மே 1983ஆம் ஆண்டு 23 முதல் 29.5.83] வைகாசித் திங்கள் 11ஆம் நாள் நிகழும் ஞான பருவபூசையில் [வீரமாகாளி சன்னிதானத்தின் 111வது பருவபூசையில்] கொண்டாடப்படும் பால்குட விழாவில் வழங்கப்படும் **அருள் முழக்கங்கள்**.

இவை குருபாரம்பரிய வாசகம் எனும் இந்துமத வரலாற்று நூல்களிலிருந்தும்; திருவாக்கு, திருவாசகம், கருவாக்கு, கருவாசகம், சூத்திறம், சூத்திரம், சூத்தரம் [சூக்தம்] ... ஆகிய நூல்களிலிருந்தும் எடுக்கப்பட்டவை.

வழிபாட்டு நிலையங்களே மானுடத்தின் விழிகள்.

இறைமை நினைவே குறைகளை நிறைவு செய்யும்.

குருவழியே அனைத்திற்கும் கருவழி.

உருவ வழிபாடே அருவுருவச் சித்தியின் சத்திநிலை.

ஐந்தீ ஓம்பலே ஐம்புலனை வெல்லும் வழி.

அடியார்களைத் தொழலே முடிவிலா இன்பம் தரும்.

அனாதியும், ஆதியும் ஆறுகாலத் தொழுகையால் அறியப்படும்.

ஆலயமும், கோயிலும் அற்றதை உற்றதாக்கும்.

பொய்யடிமையில்லா மெய்யடியாரே சித்தர் நெறியாளர்.

சித்தர்களே மானுட வாழ்வின் விளக்கம்.

மத மறுமலர்ச்சியே தமிழினச் செழுச்சி.

மத வளர்ச்சியே தமிழ்மொழியின் செழுச்சி.

மத விழிச்சியே இந்துக்களின் [இந்தியரின்] எழுச்சி.

இந்துக்களே இந்தியர்கள்.

இந்து என்ருல் மனிதன் என்றே பொருள்.

இந்தியா என்ற சொல்லுக்கும் முந்தியதே இந்துமதம்.

இந்துமதத்தவரின் நாடே இந்தியா.

இந்துமத வாழ்வே இந்தியப் பண்பாடு.

பதினெண்சித்தர்கள் படைத்த பண்பாட்டுத் தத்துவமே இந்துமதம்.

குமரிக் கண்டத்து [இலெமூரியா] நாகரீகமே இந்துமதம்.

தமிழினப் பண்பாடும் நாகரீகமும் இந்துமதம்.

இன்றைய இந்தியப் பண்பாடும் நாகரீகமும் இந்துமத வளர்ச்சியே.

இந்திய சமுதாயத் தத்துவமே இந்துமதம்.

இந்தியப் பண்பாட்டின் ஆன்மீக வடிவமே இந்துமதம்.

இமயமலையை விட உயர்ந்தது இந்துமதம்.

காவிரியையும், கங்கையையும் விட வற்ருத வளமுடையது இந்துமதம்.

இந்த மண்ணுலகுக்கும் முந்திய விண்ணுலக மதமே இந்துமதம்.

விண்ணுலகத்தாரின் அருட்கொடையே இந்துமதம்.

பித்தர்களையும், எத்தர்களையும் திருத்தும் சித்தர் நெறியே இந்துமதம்.

அக ஒளியையும், புற ஒளியையும் வழிபடுவதே இந்துமதம்.

முத்தமிழால் நிகழும் முத்தீ ஓம்பல் வழிபாடே இந்துமதம்.

பைந்தமிழர் வகுத்த ஐந்திணை ஒழுக்கமே இந்துமதம்.

தமிழ் எழுத்துக்களே இந்துமதப் பிறணவங்கள்.

தமிழ் இலக்கணங்களே இந்துமதப் பிருமணங்கள்.

இம்மண்ணுலகின் முதல் குடிமகனை தமிழன் கண்டதே இந்துமதம்.

இந்துமத வாழ்வே மித வாழ்வை மாற்றும் பேராற்றலுடையது.

இந்துமத உணர்வே கடமையுணர்ச்சியைச் செழுமையாக்கும்.

இந்துமத எண்ணமே கண்ணிய உணர்வைத் திண்மையாக்கும்.

இந்துமதச் சிந்தனையே கட்டுப்பாட்டுணர்வை உண்மைப்படுத்தும்.

இந்துமதக் கருத்துக்களே உறவுகளைப் பதப்படுத்தும்.

இந்துமதத் தத்துவங்களே உரிமைகளைப் பெருமைப்படுத்தும்.

இந்துமதச் சித்தாந்தங்களே நெறிமுறைகளை நளினப்படுத்தும்.

இந்துமதச் சாத்திறங்களே வாழ்வியலை ஒழுங்குபடுத்தும்.

இந்துமதத் தோத்திறங்களே சித்திகளை எளிதில் வழங்கும்.

இந்துமதச் சடங்குகளே சித்தியோகம் (கர்மயோகம்).

இந்துமதப் பூசைகளே இச்சா சித்தியோகம்.

இந்துமத இலக்கியங்களே ஞான சித்தியோகம்.

இந்துமத ஒழுகலாறுகளே தவ சித்தியோகம்.

இந்துமத நம்பிக்கைகளே அக சித்தியோகம்.

இந்துமதப் பழக்க வழக்கங்களே புறச் சித்தியோகம்.

இந்துமதம் ‘ஒரே கடவுள்’ என்ற மாயையை, மடமையை மாய்க்கும் ஞானயோகம்.

இந்துமதம் கலைகளின் மாயைகளை வென்று அதை உய்வுக்கு ஏற்ற சாதனமாக்கிய மெய்ஞ்ஞான யோகம்.

இந்துமதம் முதலாளித்துவச் சுரண்டல்களை அமைதி வழியில் ஒழிக்கும் ஓர் அரசியல் ஞானம்.

இந்துமதம் சமுதாய ஏற்றத் தாழ்வுகளை அறவழியில் அழிக்கும் ஒரு சமுதாய ஞானம்.

இந்துமதம் தன்னலவாதிகளின் ஏமாற்றுகளைத் தடுக்கும் பகுத்தறிவு வாதம்.

... ... ...

... ... ...

... ... ...

இந்துமதம் என்பது மனிதரைக் கடவுளாக்கும் செயல்திட்டம்.

இந்துமதமென்பது கடவுள் மனிதராகப் பிறப்பதை விளக்கும் ஓர் உண்மை வரலாறு.

இந்துமதம் என்பது ஒரே கடவுள் என்று கூறும் மாயாவாதத்தை மாய்க்கும் ஒரு பகுத்தறிவு வாதம்.

இந்துமதக் கடவுள்கள்தான் அடிக்கடி மக்களுடன் தொடர்பு கொள்ளுகிறார்கள்.

-----------------------------------------

**//உண்மை நகல்//**

**//மூல நகல்: கையெழுத்துப் பிறதியாக இருந்தது. இடையில் ஓரிரு பக்கங்கள் இல்லாமல் கிடைத்தது.//**

# குருவாசகங்கள்

1. ஊழ்வினை தொடரும்.
2. பழம் பிறப்புக்களின் நினைவு திருவருளாலும் குருவருளாலும் விளையும்.
3. ஆவி, ஆன்மா, உயிர் மூன்றும் குருவருளால் இணையும் போது பிறப்பிறப்பற்ற பெருநிலை கிட்டும்.
4. இறைவன், உயிர், பாசம்(தளை) எனும் மூன்றும் குருவருளாலேயே உணரப்பட்டு உரிமையாக்கப்படும்.
5. குருவையே விழியாக, வழியாக, வழித்துணையாகக் கொள்பவரே அணுக்கருவுலகையும், உருவப் பொருளுலகையும், அருவுருவத் திருவுலகையும் வென்று உயர்ந்து நிலைபேறு பெறுவர்.
6. பழம்பிறப்புணர்த்தும் உறவுகளும், உரிமைகளும் எல்லையற்ற களிப்பு நல்குமென்பதால் குருவாக்கிலோ, குருவாசகத்திலோ இவற்றை உணர்பவரே பத்தி, சத்தி, சித்தி, முத்தி எனும் நான்கிலும் நிறைவு பெறுவர்.
7. கரு, குரு, திரு மூன்றும் ஒருமைப்படுபவரே ஞானத்தால் தருவாக இருப்போர்க்குத் தாயாகத், தாரமாகத், தானீன்ற மகளாகச் செயல்படுவர்.
8. குருவால் இட்டும், தொட்டும், சுட்டியும் விளக்கப்பட்டவையைப் பயன்படுத்த முடியாதவர் கண்ணிருந்தும் குருடரே.
9. அறியாமை மிக்கவரின் இச்சையடக்கச் சொல்லிய சூட்சமங்களே மோட்ச நரகங்கள்.
10. புரியாமை மிக்கவரின் வெறிப்போக்குகளை நெறிப்படுத்தும் சூழ்ச்சிமிகு ஆட்சிச் சொற்களே பாவபுண்ணியங்கள்.
11. அன்றுடம் கண்ணுக்குமுன் காணும் கணக்கற்ற காரிகையர் மாதந்தோறும் மலரும் புனித மலர்களே! இவர்களைப் பூசை செய்தே பூவுலகும், மூவுலகும் வெல்லலாம்.

12. அத்தனைக்கும் மூத்தவளான ஆத்தாளின் வடிவான பெண்டிரை அன்புடன் நினைத்துப் பாசமுடன் பரவிச் சேர்ந்து வாழ்ந்தாலே அருட்சொத்தனைத்தும் தேடி வந்து சேரும்.
13. பூசைத்தெய்வமாக, மலராக வந்த பாவையரை விதவையரென ஒதுக்கல் மாபெரும் பழியையும் பாவத்தையும் நல்கும்.
14. அங்கமெல்லாம் கையாக்கி ஆயுதமெடுத்துக் காக்கும் ஆத்தாளின் வடிவான பெண்டிரே பேரின்ப வீடு.
15. திங்கள் சூடிய சிவனே மங்கைக்குப் பாதி உடல் ஈந்த பிறகு மங்கையை அடிமைப்படுத்தல் பெரும்பாவமும், பழியுமே தரும்.
16. சங்கரனுரே கங்கையை முடிமேல் தாங்கிய பின்னும் பெண்ணை அருளுலகத் தடையென மறுத்தலும், வெறுத்தலும், பழித்தலும், இழித்தலும் பேதமையன்றோ!
17. மூவரும், தேவரும், உம்பரும், பிறரும் போற்றித் துய்த்து உய்வு பெறும் இன்ப ஊற்றுன பெண்களே துன்பம் நீக்கும் மருந்து.
18. கங்கைக்கரைக் கண்ணன் எங்கும் எப்போதும் நங்கையரோடு இருப்பது கண்டும் மங்கையரை நீக்கும் தவவாழ்வு எற்றுக்கு?
19. சித்தர்கள் கன்னிகளை ஆத்தாளாக்கிப் பூசைகள் நிகழ்த்த மறைகளும், முறைகளும், நெறிகளும், வேதங்களும், நாதங்களும், போதங்களும், ஓதங்களும் நல்கியிருப்பது கண்டும் பெண்ணைக் கோபிப்பதோ, தண்டிப்பதோ, வருத்துவதோ பெரும்பாவம் என்பது புரியாதிருப்பது மடமையினும் மடமையன்றே!
20. சித்தர்கள் 'பெண்பழியே பெரும்பழி' எனப் புகன்றும் பெண்களை இழிவு செய்யும் புன்மையாளர்கள் வாழ்வதே இயற்கையின் சீற்றமிகு தண்டனைகளுக்குக் காரணம்.

**அன்பு**
**குருதேவர், குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் கருவூரார்,**
**29/9/83.**

**//உண்மை நகல்//**
**//மூலம்: கும்மிடிப்பூண்டி சித்தரடியார் திரு ஏ.இரவி அவர்களின் கையெழுத்தில் இருந்த நகல்.//**

# பதினெண்சித்தர் பீடாதிபதிகளின்

# கருவாசகம்

**"தமிழே தமிழரின் விழி";**
**"தமிழே தமிழரின் உயிர்";**
**"தமிழே தமிழரின் மானம்";**
**"தமிழே தமிழரின் சமுதாயம்";**
**"தமிழே தமிழரின் அரசு";**
**"தமிழே தமிழரின் பெருமை";**
**"தமிழே தமிழரின் உரிமை";**
**"தமிழே தமிழரின் அகமானப் பண்பாடு";**
**"தமிழே தமிழரின் புறமானப் பண்பாடு";**
**"தமிழே தமிழரின் அறிவியல்";**
**"தமிழே தமிழரின் கலையியல்";**
**"தமிழைக் காப்பவரே தமிழரைக் காப்பவர்";**
**"தமிழை வளப்படுத்துபவரே தமிழரை வளப்படுத்துபவர்";**
**"தமிழை மதிப்பவரே தமிழரை மதிப்பவர்";**
**"தமிழை வளர்ப்பவரே தமிழரை வளர்ப்பவர்";**
**"தமிழ் எழுத்துக்களே தமிழரைக் காக்கும் போர்க் கருவிகள்";**
**"தமிழ்ச் சொற்களே தமிழரைக் காக்கும் போர் வீரர்கள்";**
**"தமிழ் இலக்கியங்களே தமிழரைக் காக்கும் போர்ப் படைகள்";**
**"தமிழறிஞர்களே தமிழரைக் காக்கும் போர்த் தளபதிகள்! தலைவர்கள்!";**
**"தமிழ் போற்றும் சமயமே தமிழரின் சமயம்";**
**"தமிழ் காக்கும் அரசே தமிழரின் அரசு";**
**"தமிழ் வளர்ப்பவரே தமிழரின் தலைவர்";**
**"தமிழே கடவுள்"; "தமிழே அமிழ்து"; "தமிழே உயிர்." ...**

**- கருவாசகம்.**

***//குருதேவர் எழுதியருளிய 'எந்த மானுடம் இந்த மானுடம்' என்ற நூலின் அறிமுகவுரையிலிருந்து எடுக்கப்பட்ட வாசகங்கள்.//***



“... இம்மண்ணுலக அருளாளர் வரிசையிலேயே முதன்முதல் அரசயோகத்தைத் துவக்கி மிகப்பெரிய வெற்றி நிலைக்குரிய சாதனை நிலையைத் தோற்றுவித்தவரும்; கருவறைக் கோபுரமுடைய **தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டியவருமான பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களே** போர்க்கோலம் பூண்டு, படை நடத்தி, வேலோச்சியும், வாள் வீசியும், அத்திறங்கள் எய்தும், குருதியாறு ஓடவிட்டும்தான் ‘இந்து மறுமலர்ச்சி இயக்கம்’ வெற்றி பெறுமாறு செய்தார். ... ...”

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானச்சாரியார் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்** அவர்களின் குருவாணைப் படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் உள்ள, எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

---

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

www.newsletters.gurudevar.org www.gurudevar.org
www.induism.org *Email:* indhuism@gmail.com
www.books.gurudevar.org